# 20

# பொருளியல் பற்றித் தெரிந்திடுவோம்

இஸ்லாம் என்பது வாழ்வுமுறை
முஸ்லிம் உம்மத் அறிந்த முறை
தனிநபர் குடும்பம் சமூகமென
அனைத்தும் அடங்கிய வாழ்வுமுறை
அல்லாஹ் அருளிய வேதமுறை
அண்ணல் நபியார் நடந்த முறை
அரசியல் சமூகம் ஆன்மீகம்
அறிவியல் அழகியல் உளவியலும்
ஒருங்கே அமைந்த இஸ்லாத்தின்
பொருளியல் பற்றித் தெளிந்திடுவோம்.
பொருளில்லார்க்கு உலகமிலை
பொருந்தும் முஸ்லிம் சமூகத்தில்
அருளாய் கிடைக்கும் அதனையே
அன்பாய் ஏற்றல் முறையாகும்
செல்வம் அனைத்தும் இறைவனதே
சேர்தல் நுகர்தல் அவன்வழிக்கே
தனியார் செல்வம் திரட்டிடலாம்
'ஏகன்' விதிப்படி செலவிடலாம்
சமூகம் தேவை எனும்போது
சலியா ததனை ஈந்திடலும்
தேவைக் கதிகம் கிடைத்திட்டால்
தேவை யுள்ளோர் நலனுக்காய்
உவந்து ஈயும் உளத்துக்கே



தெவிட்டா இன்பம் விதியுண்டு
செலவிடுவதிலும் தடையுண்டு
சேரா ஹராமென விலக்குண்டு
வணிகம் கைத்தொழில் விவசாயம்
வழங்கிடும் சேவைத் தொழிலனைத்தும்
உழைப்பின் மூலம் வருவாயைத்
தந்தால் அதுவே ஹலாலாகும்
இஸ்லாம் மொழிந்த தொழில்களிலும்
இயம்பும் நெறிமுறை தவறிடினும்
கிடைக்கும் வருவாய் ஹராமாகும்
கிட்டி நுகர்தல் பவமாகும்
வட்டி சூது மோசடியும்
லஞ்சம் கப்பம் வழிப்பறியும்
மதுவை விற்றல் தயாரித்தல்
மக்கள் நலனுக் கூறுசெயல்
கற்பை விற்றுக் காசேற்றல்
களவைச் செய்து ஏமாற்றல்
கடமை தவறிய பணிக்கூறும்
தடையாம் ஹராமில் சேர்ந்திடுமே.
பொருளிய லென்பது உலகியலாம்
அருளியல் அதனில் இணையாதாம்
என்போர் கூற்றை விலக்கிடுமே
இஸ்லாம் அதிலே தலையிடுமே
அளவை மீறி நுகர்தலுமே
அடக்கி உலோபம் செய்தலுமே
தெளிவை அறியா மூடர்களின்
தெரிவே அறிவீர் சீடர்களே



முதலை ஆள்வோன் முதலாளி
முயன்று உழைப்போன் தொழிலாளி
பேதம் அதிலே இல்லையடா
இறைவன் இடத்தில் சமமாவர்
வேலை செய்வோர் அவர்களிடம்
வேலை கொள்வோர் படித்தரத்தில்
சமமே பரஸ்பரம் உறவுடையோர்
சமத்துவ நடைமுறை இதிலுண்டே
செல்வம் ஒருவரில் குவியாது
செய்வீர் என்றது குர்ஆனே



ஸக்காத் வக்பு வராஸத்து
தக்க வழியா யமைந்துளது
அல்லாஹ் காட்டித் தந்தமுறை
அழகிய பொருளியல் வழிமுறையே
போதனை விழிப்புடன் கற்றிடுவோம்.
சோதனை வரினும் தொடர்ந்திடுவோம்.

**அடிக்குறிப்புகள்**

| | | |
|---|---|---|
| தெவிட்டா இன்பம் | - | சுவர்க்க இன்பம் |
| சேவைத் தொழில் | - | அரச, தனியார் சேவை |
| கிட்டி | - | நெருங்கி |
| பவம் | - | பாவம் |
| ஊறு | - | துன்பம் |
| கற்பை விற்று காசேற்றல் | - | விபச்சாரம் |
| பணிக்கூறு | - | பணி செய்யும் பகுதிகள் |
| அருளியல் | - | அல்லாஹ்வின் ஆணை, அருட்கொடை, ஆன்மீகம் |
| படித்தரம் | - | அந்தஸ்து |

**பயிற்சி:**

1. சரியானதை (✓) எனவும் பிழையானதை (×) எனவும் அடையாளமிடுக.
   - i) செல்வங்கள் அனைத்தும் மனிதனுக்குச் சொந்தமானவை.( )
   - ii) செல்வங்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப திரட்டப்பட வேண்டும். ( )
   - iii) செல்வத்தை விரும்பியவாறு செலவிட முடியும். ( )
   - iv) செல்வத்தைத் திரட்டுவதிலும் செலவிடுவதிலும் ஹலால், ஹராம் பார்க்க வேண்டும். ( )
   - v) செல்வம் ஒரு பகுதியாரிடம் குவிவதை இஸ்லாம் விரும்புகிறது. ( )
   - vi) இஸ்லாத்தின் வழியில் பொருள் திரட்டும்போதும் செலவிடும்போதும் உளத் திருப்தி ஏற்படும். ( )

2. செல்வம் திரட்டும் தவறான வழிமுறைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
3. செல்வம் பகிரப்படும் வழிமுறைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.